

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தாயார் மறைந்த அஞ்சுகத்தம்மையார் நினைவு தினத்தை முன்னிட்டு திருவாரூர் காட்டூரில் உள்ள அன்னை அஞ்சுகத்தம்மையார் நினைவிடத்தில் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அம்மையாரின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தியதோடு, காட்டூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி பள்ளி மாணவ மாணவிகளுக்கு மதிய உணவினை பரிமாறினார் . நிகழ்வில் கலைஞர் அவர்களின் குடும்பத்திலிருந்து சோமாஸ் கந்தன் , இளங்கோவன் உள்ளிட்ட குடும்பத்தாரும் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் பங்கேற்றனர்.







ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வபெருந்தகை, கழக துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராசு ஆகியோர் வீதி, வீதியாக, வீடு, வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர். வாக்கு சேகரிப்பில் கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், மாவட்டக் கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், மாவட்ட கழக பொருளாளர் ப.க.பழனிசாமி, கீதா நடராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

### தஞ்சை மத்திய மாவட்டம் –

# திருவையாறு சட்டமன்றத் தொகுதி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!



தஞ்சாவூர், ஜன. 29 - தஞ்சை மத்திய மாவட்டம் - திருவையாறு சட்டமன்ற தொகுதி பி.எல்.ஏ2, பி.எல்.சி மற்றும் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளர்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : மாண்மிகு கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதல்படி வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து தஞ்சை மத்திய மாவட்டம், திருவையாறு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பி.எல்.ஏ2, பி.எல்.சி, கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (29.01.2025 -புதன் கிழமை) மாலை 04.00 மணியளவில் பூதலூர் ஆர்.கே.ஏ.பி.திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தொகுதி மேற்பார்வையாளர் நாகை கோ.மனோகரன், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், எல்.கணேசன், ச.முரசொலி எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ உள்ளிட்ட கழக முன்னோடிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

அதுசமயம் கூட்டத்தில் பி.எல்.ஏ2, பி.எல்.சி, ஒன்றிய, பேரூர், வார்டு செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தவறாது குறித்த நேரத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில்

# நாகப்பட்டினம் மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய- நகர - பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

## எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

நாகப்பட்டினம் மாவட்ட பொறியாளர் அணிக்கான ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல், மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கீழ்க் கண்டவாறு நடைபெற உள்ளது.

இந்த நேர்காணலில் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய / நகர / பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்துகொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள் : 01.02.2025 (சனிக்கிழமை),
நேரம் : காலை 10.00 மணி,
இடம் : மாவட்டக்கழக அலுவலகம்,
(புதிய பேருந்து நிலையம் அருகில்)
நாகப்பட்டினம்.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி



நாகை மாவட்டம் நாகை வடக்கு ஒன்றிய தி.மு.க. பாகநிலை முகவர்கள்(பி.எல்.ஏ.2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள்(பி.எல்.சி.) கலந்தாய்வு கூட்டம் சிக்கலில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக கழகச் செயலாளர் என்.கௌதமன் பேசினார். உடன் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், நாகை வடக்கு ஒன்றியச் செயலாளர் சிக்கல் என்.ஆனந்த், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் கேஸ் வி.செந்தில், டி.தமயந்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.சுரேஷ் மற்றும் பலர் உள்ளனர்.

### மண்ணின் மைந்தர் கலைஞரின் தாயார்

# அஞ்சுகத்தம்மையார் நினைவு தினம்!

## பூண்டி.கே.கலைவாணன் -சோமாஸ் கந்தன் மலரஞ்சலி!

திருவாரூர், ஜன. 29 - மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தாயார் மறைந்த அஞ்சுகத்தம்மையார் நினைவு தினத்தை முன்னிட்டு திருவாரூர் காட்டூரில் உள்ள அன்னை அஞ்சுகத்தம்மையார் நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அப்போது மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ அவர்கள் அம்மையாரின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தியதோடு, காட்டூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி பள்ளி மாணவ மாணவிகளுக்கு மதிய உணவினை பரிமாறினார் . நிகழ்வில் கலைஞர் அவர்களின் குடும்பத்திலிருந்து சோமாஸ் கந்தன், இளங்கோவன் மற்றும் குடும்பத்தினர் பங்கேற்றனர்.

ஆண்டுதோறும் நடைபெறும் அஞ்சுகத்தம்மையார் நினைவஞ்சலி நிகழ்வில், இந்த ஆண்டும் காட்டூரில் ஏழை, எளிய, மாணவ மாணவிகளுக்கு மதிய உணவும், அன்னை அஞ்சுகத்தம்மையார் நினைவிடத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. மேலும் அங்குள்ள முன்னாள் மத்திய அமைச்சர் மறைந்த முரசொலி மாறன், முரசொலி ஆசிரியர் செல்வம் உள்ளிட்டோரின் திருவுருவப் படங்களுக்கும் மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், கலைஞர் அவர்களின் குடும்பத்தை சேர்ந்த சோமாஸ் கந்தன், தஞ்சாவூர் இளங்கோ , விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் வீ.ஆர்.என்.பன்னீர், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் காட்டூர் சதீஷ் , ஒன்றிய செயலாளர் திருக்குவளை சோ.பா. மலர்வண்ணன், டி.எஸ்.எம்.என்கிற முத்துகுமாரசாமி, சீனு என்கிற சீனிவாசன் ஊராட்சி மன்ற தலைவர் பிரபாகரன், வீரபத்திரன் உள்ளிட்டோரும் , பொது மக்களும் பங்கேற்று அன்னை அஞ்சுகத்தம்மையார் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர்.



நாட்டின் 76வது குடியரசு தின விழாவை ஒட்டி நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி வளாகத்தில் மூவர்ண தேசிய கொடியினை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஏற்றி வைத்து மரியாதை செய்து பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட் புக் மற்றும் பேனா, பென்சில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர்கள் நாகராஜன், ஜேசுதாஸ், கூட்டுறவு சார் பதிவாளர்கள் குமாரிமோகனா, பிரேமலதா, சரவணன், மாநகராட்சி துணை மேயர் பூபதி, நகர செயலாளர் ராணா.ஆனந்த் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மும்பை த.மு. ஆரியசங்காரன்

**சனவரி 29 (2016)**



சிறுவயது முதல் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட இரத்தினவேல் என்கின்ற இவர், 1942ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்க மாநாட்டு மேடையில், தனது 16ஆவது வயதில் பேசியபோது, தந்தை பெரியார் அவர்களால் ‘ஆரிய சங்காரன்’ என்று பெயரிடப்பட்டவர்.

1948ஆம் ஆண்டில் மும்பைக்கு குடிபெயர்ந்த இவர், 1951ஆம் ஆண்டு தி.மு.கழகத்தில் இணைந்து, தாராவி கிளைக் கழகச் செயலாளர், மும்பை தி.மு.க. செயலாளர், பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்

மராட்டிய மாநில ஆட்சியாளர்களிடம் கழகத்தின் சார்பில் நல்லுறவு கொண்டு மும்பைவாழ் தமிழ் மக்களுக்கு அளப்பரிய நன்மைகள் செய்து, மும்பை பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

2013ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் ‘‘பெரியார் விருது” வழங்கிச் சிறப்பித்தார் தலைவர் கலைஞர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### புதுக்கோட்டையில் கவிச்சுடர் கவிதைப் பித்தன் தலைமையில்

# சமத்துவப் பொங்கல் விழா!

## கே.கே.செல்லப்பாண்டியன் பரிசுகள் வழங்கினார்!

புதுக்கோட்டை, ஜன. 29 - புதுக்கோட்டை காந்திநகர் புனித அந்தோணியார் கோவிலில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் திருவிழா சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கவிச்சுடர். கவிதைப்பித்தன். தலைமையில் நடைபெற்றது.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் சிறப்புரையாற்றினார்.

நிகழ்வில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா, மாநகர துணை மேயர் எம் லியாகத் அலி, பங்குத்தந்தை அருட்திரு சவரிநாயகம் அடிகள். தவத்திரு தயானந்த சரஸ்வதி சுவாமிகள். ஜனாப் முகமது உசேன், மாவட்ட திமுக துணைச் செயலாளர் பி.ராஜேஸ்வரி, தலைமைச் செயற் குழு உறுப்பினர் சுப. சரவணன், அ.ரெத்தினம். மாநகர தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் செ. கணேஷ் செந்தில் மற்றும் கிறிஸ்தவ நல்லெண்ண இயக்க மாவட்ட நிர்வாகிகள். கலந்து கொண்டு சிறப் பித்தனர்.

சிறப்பு விருந்தினர்களுக்கு தி.மு.க. பொதுக்குழு உறுப்பினரும் மாமன்ற உறுப்பினருமான இராசு சந்தோஷ் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார். கிறிஸ்துவ நல்லெண்ண இயக்க மாவட்ட செயலாளரும் தி.மு.க. மாவட்டப் பிரதிநிதியும். ஊர் நாட்டாண்மையுமான ஆ.ஜேம்ஸ் பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.

திமுக மாவட்ட இலக்கிய அணி துணைத் தலைவர் கவிஞர் ஆ மரிய எட்வின் நன்றி கூறினார். இந்து முஸ்லிம் கிறிஸ்துவ பொது மக்கள் சமத்துவப் பொங்கல் வைத்து கொண்டாடினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.எஸ்.கே. சத்தியேந்திரன்

**சனவரி 29 (1986)**



இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர்.

இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் – பின்னர், இராமநாதபுரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் களம் கண்டு சிறை சென்ற தீரர், நல்ல பண்பாளர், இனியவர், எளியவர், செயல் வீரர்.

“சேதுபதிச் சீமையின் செந்தாமரை மலரே! உறுதி குலையாத உடன்பிறப்பு என்ற பெருமைக்குரிய உனது கால்மலர்களில் எனது கண்ணீரைப் பன்னீராய்க் கொட்டி உனக்கு இறுதி வணக்கம் செலுத்துகிறேன். நிழற்படமாகி விட்டாய் எனினும், எங்கள் நெஞ்சில் நிலையான இடம் பெற்றுவிட்டாய்” என தலைவர் கலைஞரால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**